போர்வாள்

"போர்வாள்"

சந்தா விபரம்

★

ஓராண்டு	ரூ.	5 0 0
6 மாதம்	ரூ.	2 8 0
தனிப்பிரதி		0 1 6

ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார்
நா. இளஞ்செழியன், B.A. (Hons)

திராவிடர்
வாரத் தாள்

தனி இதழ் அணா 1½
வெளி நாடு அணா 2

வாள் 3 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 ஐப்பசி 13
29—10—49 சனிக்கிழமை | வீச்சு 10

பொதுநல சேவைதான் புரிகிறதாம்!

"காங்கிரஸ் பொதுமக்களின் நன்மைக்கான நற்பணிகளைத்தான் புரிந்து வருகிறது; அது பதவி வேட்டையாடுகிறது என்று சொல்லப்படுவதெல்லாம் சுயநலமிகளின் கூச்சல்; அதை நீங்கள் சிறிதும் நம்பாதீர்கள்."

—காமராஜரின் சென்னைச் சொற்பொழிவு.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்குத் தெரியும். இருப்பினும் அந்தக் கனவு என் எண்ணங்களைக் குழம்பச் செய்தது! என் உள்ளம் ஏதேதோ நினைப்புகளுக்கு இடம் தரத் தலைப்பட்டது.

என் மகன் பிறந்து மூன்று மாதங்களுக்கு மேலாயிற்று. இளவரசரின் நடவடிக்கைகளைப் பற்றிய தகவல் ஒன்றும் எங்களுக்குத் தெரியவில்லை. இசையொலியும் வருவது கிடையாது! அவள் ஏன் வரவில்லை? அரசர் ஒரு வேளை அவள் மேல் ஐயம் கொண்டு அடைத்து விட்டிருப்பாரோ சிறையில்? எங்களால் அவளுக்கு என்னென்ன இன்னல்கள் நேரிட்டனவோ? இளவரசரின் கதி என்னவாயிற்றோ? வஞ்சக வலை வீசி சூட்சிக்காரக் கும்பல் அவனைப் பிடித்து விட்டதோ? இப்படி யெல்லாம் நாங்கள் எண்ணி ஏக்கத்தில் ஆழ்ந்திருந்த நேரத்தில் மலர்க்கோதையின் அண்ணிக்கு ஓர் பெண்குழந்தை பிறந்தது!

ஓர் மாதம் சென்றது! தன்னந் தனியான தீவில் வசிப்பதைப் போல, எந்த விதமான செய்தியும் தெரியாமல் நாங்கள் இருந்து வந்தோம்! எந்நேரமும் வருத்தமும், எப்படிப் பட்ட ஆபத்து நேர விருக்கிறதோ என்ற அச்சமும் எங்கள் உள்ளத்தில் குடி கொண்டிருந்தன!

ஓர் நாள் இரவு! சயன அறையின் வெளியே குழந்தைகளின் மலர்க் கண்களையும், தாமரை முகங்களையும் கண்டு சிறிது மகிழ்ச்சியடைந்து கொண்டிருந்தோம்!

வேகமாக வெளிக்கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டதும், குழந்தைகளை அள்ளி எடுத்துக் கொண்டு உள்ளே ஓடினோம்!

பெருமூச்சு வாங்க உள்ளே ஓடி வந்தாள், இசையொலி! மூச்சுத் திணறப் பேசத் தொடங்கினாள்!

"நீங்கள் எங்கே ஒளிந்திருக்கிறீர்கள் என்ற உண்மையைக் கூறும்படி அரசர் கேட்டார்! தெரியாது என்றேன்! ஆட்களை விட்டு அடிக்கச் செய்தார்! அப்பொழுதும் தெரியாது என்ற கூறினேன்! என்னைச் சிறையில் அடைக்கும்படி உத்தர விட்டார்! இத்தனை நாட்களாக சிறையில் கிடந்தேன்......நீங்கள் இங்கிருப்பது மன்னருக்குத் தெரிந்து விட்டது! இன்றிரவுதான் உங்களைக் கைது செய்ய ஆட்கள் வருவதாகக் கேள்விப் பட்டதும், சிறையிலிருந்து தப்பி ஓடிவந்தேன்! விரைவாக வெளியே போய் விடுங்கள்! எங்கேயாவது தப்பிச் சென்று விடுங்கள்!" என்று விடாது வேகமாகக் கூறிமுடித்தாள்!

குழந்தைகளை நான் தூக்கிக் கொண்டேன்! அவர்கள் என் பின் வந்தனர். காளிச்சிலையைத் தாண்டிச் சென்றோம்! ஆட்கள் ஓடிவரும் சப்தம் கேட்டதும் மறைவான ஓர் இடத்தில் ஒளிந்தோம்! வந்து விட்டனர்! இருக்குமிடத்தையும் கண்டு கொண்டனர்! முதலில் இளவரசி மலர்க்கோதையின் கையைப் பிடித்தனர்! அவள் கதறினாள்! "எப்படியாவது குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்" என்று கதறினாள்! பதுங்கி பதுங்கி எப்படியோ குழந்தைகளோடு நான் மட்டும் தப்பி கோயிலை விட்டு வெளியே வந்தேன்! அங்கிருந்து வேகமாக ஓடினேன்! வானில் நிலவு பால்போல் காய்ந்து கொண்டிருந்தது! அழுகையும் ஆத்திரமும் எனக்கும் பிறிட்டுக் கொண்டு வந்தன!

குழந்தைகள் இரண்டையும் எப்படியாவது காப்பாற்றினால் போதுமென்ற ஒரே எண்ணத்தினால், வெறிபிடித்தவனைப் போல திக்குத் திசை தெரியாமல் ஓடினேன்.

"இளவரசரின் கதி என்னவாயிற்று என்பதை இசையொலியிடம் கேட்காமல் போனேனே!" என்ற எண்ணம் தோன்றியது!

எதிரே ஓர் ஆறு குறுக்கிட்டது! மெதுவாக நடந்து அதைக் கடக்கப் போனேன்! கனவில் மூழ்கி மறைந்த அரசிளங்குமாரர்களின் நினைவு வந்ததும் என் உள்ளம் மேலும் திடுக்கிட்டது! ஆற்றில் தண்ணீர் அதிகமில்லாததினால் அதில் நடந்தே சென்று விட்டேன்!

அடுத்திருந்த காட்டினுள் நுழைந்தேன்! தள்ளாடித் தள்ளாடி நடந்தேன்! சிறிது தூரம் சென்றதும் குதிரைகள் வரும் காலடி சப்தம் கேட்டது! அசைவற்று ஒன்றும் செய்யத் தோன்றாது நின்றுவிட்டேன்! குழந்தைகளின் முகங்களைப் பார்த்ததும் என் கண்களில் தாரை தாரையாக கண்ணீர் வழிந்தது! அந்தப் பச்சையிளங் குழந்தைகளை அணைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தேன்! குதிரைகளின் மீது இருவர் வருவது நன்கு தெரிந்தது! அடுத்திருந்த ஒரு பெரிய மரத்தின் பக்கத்தில் ஒளிந்து கொண்டேன்! குதிரைகள் அம்மரத்தின் அருகே வந்ததும் நின்றன! வீரர்கள் இறங்கினர்! அச்சத்தால் என் உயிரே போய்விடும் போலாகிவிட்டது! குழந்தைகளின் கதி என்னவாகுமோ என்றெண்ணியதும் என் தலை சுற்றியது!

(தொடரும்)

வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சிமுரசு!

★

காரிருள் அகன்றது; கதிரொளி எழுந்தது!

★

கலையிலே மறுமலர்ச்சி—கருத்திலே பெரும்புரட்சி!

கல்லும் முள்ளும் தோன்றாக் காலந் தொட்டு தம்மில் மிக்காரும், ஒப்பாரும் இன்றித் தனிச் சிறப்புடன் வாழ்ந்து வந்தவன் தமிழன். வாழ்ந்தான் என்றால் வகைகெட்டு, மரப்பட்டையை மானங்காக்கும் ஆடையாகவும் மரக்கிளைகளை இல்லமாகவும் கொண்டு விலங்கினத்தின் ஒரு பகுதியினனாக வாழவில்லை. தேனிடையூறிய செம்பவள இதழாளை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு 'அகத்திலும்', 'புறத்திலும்' திளைத்தவன் தமிழன். குளம் தொட்டு வளம் பெருக்கி, காடழித்து நாடாக்கி இன்ப புரியிலே உல்லாச வாழ்வு வாழ்ந்தவன் தமிழன். அறிவைத் துணைகொண்டு ஆக்கப் பொருள்கள் பலகண்டு மனிதனின் மட்டற்ற உழைப்பைக் குறைத்து, வாழ்க்கை வசதிகள் பெருக்கி வாழ்ந்தவன் தமிழன். நாகரீக உலகிலே பவனிவரும் மேலைநாட்டவர், மலையிலே மாக்களைப் போல் உலவி, குகைகளையும் மரக்கிளைகளையும் தமது இருப்பிடமாகக் கொண்ட அந்த நாளையிலே நீள் கடல்களிலே நாவாய்களை நானிலத்திற்கும் செலுத்தி வாணிபம் நடாத்தியவன் தமிழன். பாலாவியன்ன ஆடைகளையும், எலிமயிர்க் கம்பளங்களையும், தமிழ்த் திருநாட்டின் மலைபடு பொருள்களையும் பெருமையும் மகிழ்ச்சியும் கலந்த வண்ணம் வெளிநாடுகளுக்கு ஈந்து அழியாப் புகழைக் கொண்டவன் தமிழன். நாகரீக நாடுகள் பல தோன்றா முன்னரே, அறிவுப் பெருமக்கள் பலரைத் தன்னகத்தே கொண்டு தமிழ்ச் சங்கம் கண்டவன் தமிழன். சாலையும் சோலையும் அவை தம்மில் உலவும் மாந்தரும் மயிலும், வான் முகட்டைத் தடவும் அழகுப் பெரு மலையுச்சிகளும், கடலைத் தொட்டு முத்தமிடும் ஊர்களும், வான் பொய்ப்பினும் தான் பொய்யா நதிகளும், அதிலும் தேக்கும் அழியாக் குன்றங்களும், அவனது நாட்டை அழகுக்கு அழகுபடுத்தின. அவனது நாடு வீரர் கோட்டம்—கற்புடை மாதரின் பொற்கோட்ட மட்டுமல்ல—கவிதா மண்டலம். அனிச்ச மலரெடுத்துச் சின்ன உடலாகச் சித்தரித்த மெல்லியலார் பாட்டுச் சுவை மொழியிலே சிந்துபாடி பெருமகிழ் வெய்தியிருந்தனர்: அவனது பெருமை யித்தகையது. இகழ்ந்தான் என்ற இழிசொல் தாங்காது, போர் முரசு கொட்டி வடவருடன் போரிட்டு, அவர்களைப் புறமுதுகு கண்டு வாகை சூடி, கற்புக்கரசியாம் கண்ணகிக்குச் சிலையெடுக்கும் பொருட்டு அவர்கள் தலைமீது கல்லேற்றிக் கொணர்ந்தவன் தமிழன். அன்பையும் அறநெறியையும் துணை கொண்டு செங்கோல் செலுத்தியவன் தமிழன். கடாரங் கொண்டவன் தமிழன். இமயத்திலே புலிக்கொடி நாட்டியவன் தமிழன். பொற்குவை மலையெனக் குவிந்த கொற்கையும் முசிரியும் அவனது துறைமுகப் பட்டினங்கள். நானிலமெங்கிருந்தும் வந்து மாணவர்கள் பயின்ற நாலந்தாப் பல்கலைக் கழகத்தைக் கண்டவன் தமிழன். ஆம் அவைகளைத்தும் சீரிய முயற்சிகளையும், மாண்புறு கருத்துக்களையும், அறிவுப் பெருநிதிகளையும் கொண்ட தமிழனின் சிறப்புகள் தான்!

அவன் வளர்த்த தீந்தமிழ்ப் பூங்காவிலே காவலரும், பாவலரும் வேற்றுமையின்றி உலவினர். எனவேதான் வாள்பிடித்து மறப்போர் புரிந்த மன்னனும், ஏர் பிடித்துக் கரம்பைக் கழனியாக்கிய உழவனும் பாமாலை புனையும் வாய்ப்பைப் பெற்றனர், வான வீதியிலே நீந்தி விளையாடும் வண்ண முழுமதியும், அசைந்தாடி ஓடிவரும் குளிர் தென்றலும், வண்ண மலர்ச் சோலையும் இன்னிசை எழுப்பும் குயிலும், தாமரை பூத்த தடாகங்களும் அவர்களைப் பாடப் பணித்தன. இயற்கையின் எழிலிலே திளைத்த மக்கள் கவிதை இன்பத்திலே ஊறிக் கிடந்தனர். ஐயகோ! திசை காட்டும் கருவி மாறத் தொடங்கியது.

தண்ணமுதம் பொழிந்து கொண்டிருக்கும் பால்நில வொளியிலே ஒய்யாரமாகச் சென்று கொண்டிருந்த நாவாய் வஞ்சகச் சூறாவளியிலே சிக்கிச் சீரழியத் தலைப்பட்டது. நாட்கள் பல செல்ல நாட்டவர் பலரின் கூட்டுறவால் தமிழன் தன்னை மறந்

(10-ம் பக்கம் பார்க்க)

கலியுகயுக பிரம்மதேவரின் கருணைகடாட்சம் !

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. தாங்கள்......"

"நான் சூத்திரன்தான்—தெரியும் எனக்கு, சூத்திரனுக்குப் பட்டாபிஷேக உரிமை இல்லை என்று இந்து சாஸ்திரங்கள் கூறுகின்றன—அதுவும் தெரியும் எனக்கு தெரிந்தும்தான் கூறுகிறேன். நான் பட்டாபிஷேகம் புரிந்துகொள்ளத்தான் வேண்டும்."

"அது சாஸ்திர விரோதமாச்சே மகராஜ்! அதனல் நாட்டிற்கு நாசம் சம்பவிக்குமே, தெய்வ குற்றம் வந்து சேருமே, மராட்டியம் பாழாகுமே, வேண்டாம் மகராஜ் இந்த எண்ணம்!"

"அவசரப் படாதீர்கள்! சகலகலா சாஸ்திரிகளே, அவசரப்படாதீர்கள்! நான் மன்னனாக வேண்டும், அதே நேரத்தில் சாஸ்திர விரோதமாகவும் நான் நடக்கக் கூடாது."

"அது எப்படி மகராஜ் முடியும்?"

"முடியும், வழி இருக்கிறது. நான் க்ஷத்திரியனாக வேண்டும். ஆம், என்னை க்ஷத்திரியனாக்க வேண்டும் நீங்கள். வேதமுறைப்படி சாஸ்திர முறைப்படி என்னை ஒரு க்ஷத்திரியன் என்று உலகெலாம் ஒப்புக்கொள்ளும் வகையில் நீங்கள் காரியமாற்ற வேண்டும். என்ன சொல்கிறீர்கள்?"

"சொல்வதென்ன பிரபோ, செய்யலாம் தங்கள் சித்தப்படி, ஆனல்..."

"ஆனல் என்ன, செலவு அதிகம் ஆகும் என்று பார்க்கிறீர்களா, என்ன செலவானலும் நான் ஏற்கத் தயார்."

"செலவு அதிகமாகும் என்பது மட்டுமல்ல நீங்கள் குறிப்பிடும் காரியத்தைச் சித்திபெறச் செய்வதே எங்களால் முடியாது. வடதேசத்தில், காசிமாநகரில், **கங்குபட்டர்** என்னும் குருதேவ் வீற்றிருக்கிருர். அவர் வந்தால்தான் இந்தக் காரியத்தை முடிக்க முடியும்.

"அதற்கென்ன, அப்படியே செய்வோம்."

சிவாஜி, உடனே, கங்குபட்டரை வரவழைப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்கிருன். பிறகு என்ன ஆயிற்று என்கிறீர்களா? இதோ, மீண்டும், வரலாற்ருசிரியர் **ஜதுநாத் சர்க்கார்** பேசுகிருர், கேளுங்கள்:—

"இந்தியா முழுவதுமுள்ள பிராமணர்கள், சிவாஜி ஒரு க்ஷத்திரியர்தான் என்று அதிகார பூர்வமாக நிரூபிக்கப் பட்டால்தான், அவனுடைய பட்டாபிஷேகத்திறகு விஜயம செய்து, தங்களுடைய மேலான ஆசீர்வாதத்தை சிவாஜிக்கு வழங்குவர். [அப்படி அவர்களுடைய ஆசிர்வாதம் கிடைத்தால் தான் பட்டாபிஷேகம் சாஸ்திரோக்தமானதாகும்]

"எனவே, எவர் ஒரு பிராமணோத்தமர் சொன்னல் இந்தியா முழுவதுமுள்ள பிராமணர்கள் ஆம்—சரி என்று மறுபேச்சின்றி ஒப்புக்கொள்வார்களோ, அப்படிப்பட்ட ஒருவரின், தயவை சிவாஜி நாடவேண்டியதாயிற்று.

"காசிமாநகரில் வாழ்ந்துவந்த கங்குபட்டர், சிவாஜியின் காலத்தில், கலியுக பிரம்மதேவர் என்றும், தற்கால வியாசபகவான் என்றும் வெகுவாகப் பாராட்டப் பட்டவர்; நான்கு வேதங்களிலும் ஆறு தத்துவங்களிலும் எல்லா சாஸ்திரங்களிலும் நிபுணத்துவம் உடையவர் என்று கருதப்பட்டவர்; அந்தக் காலத்து சமஸ்கிருத பண்டிதர்களிலேயும் கிரந்தகார்த்தாக்களிலேயும் மிகப் பெரிய ஞானி என்று போற்றப்பட்டவர். ஆகவே அவர் ஒருவரால்தான் தன் எண்ணத்தை ஈடேற்ற முடியும் என்று சிவாஜி கருதினர்.

"முதலில் வர மறுத்தபோதிலும், கங்குபட்டர், பிறகு, மராட்டிய மண்டலத்திற்கு வரவும், சிவாஜி ஒரு க்ஷத்திரியரே என்று பிரகடனப் படுத்தவும் ஒப்புக் கொண்டார்.

"ஏராளமான நிதியை சன்மானமாகப் பெற்றுக்கொண்டு, காசியில் இருந்தபடியே, கங்குபட்டர், இராமச்சந்திர மூர்த்தியின் நேர் பரம்பரையில் உதித்த உதய்பூர் மகாராஜாவின் வமசத்திலே வநத பரிசுத்த ஷத்திரியர் சிவாஜி என்று ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்.

"பிறகு, சிவாஜிக்குப் பட்டாபிஷேகம நடத்தி வைப்பதற்காக, கங்குபட்டர், சிவாஜியின் வேண்டுகோளுக் கிணங்க, மராட்டிய மண்டலத்திற்கு விஜயம் செய்ய லானர்,

"அப்போது, சிவாஜியும் அவருடைய மந்திரி பிரதானி பரிவாரங்களும், தலைநகரிலிருந்து பல மைல் தூரம் முன்கூட்டியே சென்று, கங்குபட்டரை வழியிலே வரவேற்று உபசரித்து அழைத்துக் கொண்டு வந்தார்கள்,

"கங்குபட்டருக்கு அளிக்கப் பட்ட வரவேற்பு, பாராளும் தாம் வேந்தர் ஒருவருக்கு அளிக்கப்படு வதைப்போல அவ்வளவு சிறப்பாக இருந்தது,"

இருக்காதா, சிறப்பாக! கங்கு பட்டரின் கருணை கடாட்சத்தால் தானே சூத்திர சிவாஜீ க்ஷத்திரிய சிவாஜியாக மாறிப் பிறக்க முடிந் தது! எனவே வரவேறபு பிரம்மா னநதமாகத்தானே இருந்திருக்கும்! இயற்கையாக எதிர்பார்க்கக்கூடி யதுதானே!

மராட்டிய ஆரியர்கள், சிவாஜி முடி சூடிட விழைந்தவுடனே, சூத் திரனவது—பட்டம் சூடுவதாவது விட்டோமா பார்—பிடி சாபம் என்றுர்கள், ஆனல், சிவாஜியை க்ஷத்திரியனக்குவதன் மூலம், தங் கள் இனத்திற்கு சிவாஜியைவிட மேலான தகுதியும் பெருமையும் கிடைக்கிறது என்று தெரிந்த வுடனே, 'சத்திரபதி சிவாஜி மஹா ராஜாவுககு—ஜே' என்று ஜெய ஜெய கோஷம் எழுப்பத் தொடங்கி விட்டனர்.

(தொடரும்

நீங்கள்

படிக்க வேண்டியவை

பொருள்	0	4
மறுமலர்ச்சி	0	4
கம்பரும் வம்பரும்	0	4
களஞ்சியம்	0	8

(நெடுஞ்செழியன்)

[தபாற் செலவு தனி]

பகுத்தறிவுப் பாசறை
147, பவழக்காரத் தெரு
சென்னை, 1.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துக்கள் அதில் நிறைந்து கிடந்தன. உடைந்த உள்ளத்திற்கு அவை உணர்ச்சி யூட்டின. சூது மதியினரும் ஆணவக் காரர்களும், ஆதிக்க வெறியர்களும் கட்டிக்காத்த வஞ்சகக் கோட்டை இடிந்து சாயத் தொடங்கியது. **வள்ளுவர்தம் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள், உள்ளுவரோ மனுவாதி. ஒரு குலத்துக் கொருநீதி'** என்ற மனோன்மணீயச் சொற்கள் தமிழன் இதயத்தைத் தட்டி எழுப்பியது. ஆரியர் தம் நூல்களின் மறத் தன்மையை வெளிப்படுத்தியது. **'ஆரியம்போல் உலக வழக்கழிந்து ஒழிந்து சிதையா உன் சீரிளமைத் திறம் வியந்து, செயல் மறந்து வாழ்த்துவமே'** என்ற சொற்கள் தமிழ் மொழி மாண்பினைத் தெற்றெனத் தெறித்தது. தமிழர் உள்ளம் தழைக்கவும், ஆரியம் அலறவும் ஆரம்பித்த நாள் சுந்தரம்பிள்ளை மனோன்மணீயம் தந்த நாள்.

பின்னர் வடலூர் இராமலிங்கர் தோன்றினர். வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம் என்ற வாய் வேதாந்தப் பித்தம் தெளிய மருந்து கொடுத்தார். சாதியும், சமயமும், மதமும் வேதனைக் கருத்துக்கள் என விளக்கினார். கண்மூடி வழக்க மெல்லாம் மண்மூடிப் போக எனச் பாடினார். மாலையிலே சோலை தழைக்கத் தொடங்கியது. பாழிருளில் கிடந்த தமிழகத்தில் பகுத்தறிவு அரும்பிச் செழித்தது.

'தமிழன் சூத்திரனா?—யாண்டும் எழுந்த கேள்வி இது. **ஆரியத்துக்கு அடிமையா?** எங்கும் தோன்றிய வியப்பு இது. இந்தக் கேள்வியும் வியப்பும் உருவாக்கிய ஒரு அமைப்பே நீதிக் கட்சி. அரசியலில் ஆரியம் பெற்றிருந்த ஆதிக்கக் கோட்டை அசைந்தது. சமுதாய உயர்வு தாழ்வுகள் சரிந்தன. மூடுமந்திரங்கள் அம்பலமாயின. 'தலை நிமிர் தமிழா' என்ற குரல் வான்முட்ட ஒலித்தது. விடுதலை வேட்கை தமிழர்தம் உள்ளத்தில் ஓங்கி வளர்ந்தது. அரசியலில், பொருளியலில், சமுதாயத்தில்,சமயத்தில்,வாழ்வில் அத்தனையிலும் விடுதலை வேண்டும் என்றான் தமிழன். இலக்கியத்திலே புரட்சி. கருத்திலே புதுமை, அரசியலிலே ஆட்டம், சமுதாயத்திலே மாறுதல், சமயத்திலே சலசலப்பு. பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே என்று பாடத் தொடங்கினர் மக்கள். ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை சாதியில் என்று இசைக்கலாயினர் தமிழர். தமிழன் தொன்மைபற்றிய ஆராய்ச்சி, தமிழன் உலகுக்கு நாகரிகம் கற்பித்த சிறப்பு, திரை கடலோடி வாணிபம் செய்த வளம்; கலங்கள் கரியோடு சென்று பொன்னோடு மீண்ட புகழ்; ஒன்றே குலம் என்ற தமிழனின் உயர் கொள்கை; திராவிடன்—தமிழன்—ஆரியன்—அசுரன் அத்தனையும் ஆராய்ந்து பேசப்பட்டன. புராண இதிகாசங்களின் இழிவும், சங்க இலக்கியங்களின் மேன்மையும் கூறப்பட்டன. தமிழகத்திலே புத்தொளி பரந்தது. தன்னாட்சியிலே நம்பிக்கை—திராவிட நாட்டுப் பிரிவினையிலே உறுதி தமிழன் உள்ளத்திலே துளிர்த்தது. சிந்தனைச் சிற்பிகள் தோன்றினர். பெரியார் அண்ணா—பாரதிதாசன் — மூன்று சிற்பிகளும் மறுமலர்ச்சிப் பாதை அமைத்தனர். உழைப்பிலே பெரியார்; புரட்சிப் புயல் வீசுவதிலே அறிஞர் அண்ணா, புதுமைக் கவி புனைவதிலே பாரதிதாசன். இவர்களால் பழமைக்குப் படுகுழி—அறியாமைக்கு அழிவு — மடமைக்கு இடி. ஏன், எப்படி, எப்போது என்ற கேள்விகள் எதற்கும் எழுந்தன. தமிழகத்திலே கங்குல் கழிந்தது; காரிருள் அகன்றது; கதிரொளி எழுந்தது. கலையிலே தோன்றிய ஆர்வம், கருத்திலே தோன்றிய புரட்சி தமிழரின் மறுபலர்ச்சியாக மலர்ந்தது.

தாயகத்தின் விடுதலைக்குத் தளராப் பணி புரிந்து பாளையங் கோட்டை மண்ணிலே தூக்குக் கயிற்றை முத்தமிட்ட ஆணழகன் கட்ட பொம்முவைக் கண்டான்—உணர்ச்சியின் கொந்தளிப்பிலே ஆவேசம் கொண்டு செக்கிழுத்துச் சீரழிந்த சிதம்பரத்தின் பரம்பரையைப் பார்த்தான்—அதிகார வர்க்கத்தின் அடக்கு முறைக்கு உயிரைப் பணயம் வைத்த குமரன்கள் துடித்தெழக் கண்டான் — கன்னித் தமிழணங்கைக் காப்பதற்கு உயிர் தந்த தாளமுத்த, நடராசர்கள் தயார் கூறிடும் தகைமையைக்

கண்டான்
காக ம
வேலாயுத
கண்டான்—
நீரைத் துணை
றிலே மிதந்
செவி மடுத்தா

"கொலை வாள்
கொடியோர் செ
குகை வாழ் ஒரு பு
குண மேவிய தமிழா

அந்தப் புத்துலகு சமைக்
சிப் பணியில் ஈடுபட்
பாரதிதாசனின் தீப்பொ
கும் பாக்களை இசைத்துக்
தன்மானத்தோழர்கள்
தைக் கண்டான். இருண்
கும் இதயவானிலே த
தண்ணமுதத்தைப்
கொண்டிருக்கும் புது நி
காட்சியளித்து கம்பீரமா
கும் கொடிகள் அவர்க
ளில் மின்னின. கட்
பான தமிழகம்—திராவ
காண அந்த நெஞ்சுரம்
சிங்க ஏறுகள் நரம்பை
தொடுத்து சுழலும் சூரு
நாடெங்கணும் சுற்றி அ
செய்தனர். வில்லிலிரு
அம்பென அந்தத் தீரா
லும் பாதையிலே தலை
ணம் என்கிற காட்டா
கிடக் கண்டார்கள்.
சட்டங்கள் இருபுறமும்
அறிவுப்படிகளை அவை
பொருத்தி, மடக்கேண
அந்தக் காட்டாற்றைக்
திலே கடந்தனர். அவ
போக்கிலே இப்பொழு
மெருகு—நடையிலே
விறுப்பு. கொள்கை வ
ஒரு தனி ஆர்வம்—பிர
யிலே ஒரு உத்வேகம்
கிறது. முன்னேற்றப்
தெளிவாகத் தெரிகின்ற
போர்ப்பரணியிடுகிறது
முன்னேற்றக் கழக
னேற்றப்படை நாலா
லும் பரவுகின்றது.
வில் காண்பது நிச்ச
னேற்றப் படையில்
திராவிடச் செல்வர்க
எல்லோரையும் அ
வளர்க திராவிட மு
கழகம், வாழ்க வளமா

...போர்வாள்!

...வள்ளுவர் ஆண்டு 1980 ஐப்பசி 13
29—10—49 சனிக்கிழமை

பயங்கர பலிபீடம்

★

"...ப்பா நண்பா, நாடகம் ...பிடிக்கிறதா உனக்கு?"

"...கிறதாவா, ஏதேது, ...ரிக்குமா உனக்கு என்று ...ப்பாய்போல் இருக்கிறது! ...1. ரொம்ப ஜோர்! அற் ...கதைப் போக்கு! அற் ...வசனங்கள்! அழகான ...ரில் நேரத்தில், மரினா ...யோரத்தில், ரப்பர் ...ரோல்ஸ்ராய்ஸ் காரில் ...நகப் பவனி வருவது போலிருந்தது நாடகக் காட்சிகளின் பின்னேயே என் மனம் ஓடிக் கொண்டிருந்த மாட்சி! ஆமாம் நண்பா, நாடகம், உள்ளம் உருக்கும் ஓர் ஒப்பற்ற உணர்ச்சிச் சித்திரம், தூங்கிக் கிடக்கும் நம் பகுத்தறிவைத் தட்டி எழுப்பி நடக்கச் செய்யும் நல்லறிவு ஆசான்; செந்தமிழகத்தின் சீர்கேட்டினைச் செம்மைப் படுத்தும் செவ்விவாய்ந்ததோர் புரட்சிக் கருவி. ஆமாம், இவ்வளவும் உண்மைதான், வெறும் புகழ்ச்சியில்லை! ஆனால்......"

"ஆனால் என்று ஆயாசத்தோடு பேசுகிறாயே, என்னப்பா காரணம்? இவ்வளவு ருசிகரமான நாடகத்தைத் தீட்டிய கரம் ஒரு சூனா மானாவின் வகுப்பு வாதக் கரமாக இருக்கிறதே தவிர நம்முடைய கட்சியின் 'நல்லதோர்' கரமாக இல்லையே என்று யோசிக்கிறாயா?"

"செச்சே! அதெல்லாம் ஒன்றுமில்லை தோழா! திறமை—அது எங்கே இருந்தாலும் மதிக்கப்பட வேண்டிய மாண்புமிகு பொருள் தானே! ஒரு எழுத்தாளன் வேறொரு கட்சிக் கூடாரத்தில் உலவுகிறான் என்ற காரணத்திற்காகவே அவனுடைய எழுத்துத் திறமையை மதிக்க மறுக்கும் மட்டரகமான மனிதப் பிராணியா நான், நீ கூறுவது போல எண்ணி ஆயாசப்பட! அதல்ல நண்பா நான் ஆனால் என்று இழுத்தாற்போல் பேச ஆரம்பித்ததற்குரிய காரணம். நாடகம் அற்புதமானதோர் இலக்கிய சிருஷ்டி என்பதுதான் என் ஆணித்தரமான அபிப்பிராயம். ஆனால் இந்த நாடகத்தை ஒரு வரலாற்று ஓவியம் என்று கூறுகிறார்களே, இது உண்மையாக இருக்குமா என்பதுதான் எனக்குள்ள ஐயப்பாடு!"

"நான்கூட, நாடகத்தில், காகபட்டர், மாவீரன் சிவாஜியை தன் மனம் போனபடி ஆட்டிப் படைக்கும் கட்டம் வந்த நேரத்தில், உண்மையாகவே காகபட்டர் என்றோர் ஆரிய குரு அந்த நாளில் இந்த நாட்டில் உலவிக் கொண்டுதான் இருந்தாரா அல்லது அண்ணாதுரையின் கற்பனா சக்தியின் விளைவா இந்த நாடக பாத்திரம் என்பதைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்."

"அதே சிந்தனைதான், எனக்கும் இப்போதும்! அகில இந்தியாவிலேயும் தன் புகழ்க் கொடியை நாட்டிய ஆற்றல் அரசன் சிவாஜி அரை ஜாண் பஞ்சாங்கத்தைக் கையில் ஏந்திய இந்த ஆரிய குருவின் தயவுக்காகக் காத்துக்கிடக்க வேண்டியிருந்தது என்பதும், இந்த "குரு மூர்த்தி"யின் கருணை கடாட்சம் தனக்குக் கிடைக்காவிட்டால் தன்னுடைய நாட்டிற்குத் தான் முடிசூட்டிக் கொள்ள முடியாத பரிதாப நிலையில் இருந்தான் என்பதும் நம்பக் கூடியனவாக இல்லையே! வரலாறு இப்படியுமா நண்பா இருக்கும்!"

"அதுதானே எனக்கும் புரியவில்லை! மராட்டிய மண்டலத்து மாவீரன் சிவாஜி காசிபுரத்து கனபாடி காகபட்டரின் கடைக்கண் நோக்கு தன்மீது விழாவிட்டால் தனக்குப் பட்டாபிஷேகமே நடக்க முடியாது என்று எண்ணினானே! எப்படியப்பா இது உண்மையாக இருக்க முடியும்?"

"காசிபுரத்து காகபட்டரின் கருணையைக் கோரி கைபிசைந்த வண்ணம் காத்துக் கிடந்தான் மாவீரன் என்று மட்டும் இல்லையே கதை, மராட்டிய தேசத்தில் மண்டிக்கிடந்த ஆரியமத மகோன்மத்தர்களின் ஆசியும் அருளும் அன்புப் பார்வையும் கிட்டவேண்டும் என்பதற்காகவும் கூட ஏங்கிக் கிடந்தானாமே ஏறுபோன்ற எழிலரசன் — அதுதானே வேடிக்கையாக இருக்கிறது! சரித்திரத் துணுக்குகளாக இருக்க மாட்டா நண்பா இவைகள் எல்லாம், அண்ணாதுரையின் அழகு தமிழ்க் கழனியில் விளைந்த கற்பனைப் பயிர்களாகத்தான் இருக்கும்! ஆம், அப்படித்தான் நான் எண்ணுகிறேன்."

"ஆமாம், ஆமாம், நானும் கூட அதுபோலத்தான் நினைக்கிறேன். உண்மையும் கூட அப்படித்தான் இருக்கும். மன்னாதி மன்னர்களின் மணி மகுடங்களையெல்லாம் தன் காலடியிலே உருண்டோடச் செய்த உத்தமவீரன் தன் தலையிலே ஒரு 'முடி'யை ஏற்றிக் கொள்வதற்காக வெறும் புல்லாயுதமன்றி வேறொன்றும் ஏதும் ஏந்தியறியாத வீணர்களின் தாளிலே வீழ்ந்து பணிந்தான் என்பது ஒருபோதும் உண்மையாக இருக்காது. நிச்சயமாக இருக்காது. எனக்கு நன்றாகப் புரிகிறது, நீ கூறியதைப் போல, தங்கள் கட்சிப் பிரசாரத்திற்காகத் தோழர் அண்ணாத்துரை கட்டிக் கொண்ட கற்பனைக் கோட்டை தான் இந்த நாடகம்! எவ்வளவு தான் சிந்தித்துப் பார்த்தாலும், நீ கூறிய அந்த முடிவைத் தவிர வேறு எந்த முடிவுக்கும் நானும் வரமுடியவில்லை."

"நீயும் நானும் மட்டுமா, வேறு யாராக இருந்தால் தானென்ன, வேறு முடிவுக்கு எப்படி வந்துவிட முடியும்? சீறிப் போரிடும் குணம் படைத்த சிங்க ஏறு சிறு நரிகளின் தாள்பணியும் அளவுக்குச் சிறுமை அடைய முடியும், அப்படியும் ஒரு வரலாறு இருக்கிறது என்று கூறினால் யார்தானப்பா அதை ஒப்புக் கொள்ள முடியும்?"

* * *

அறிஞர் அண்ணாதுரை அவர்

நம்பமுடியாததுதான்! ஆனால் நடந்திராதது அல்ல!

களின் அழகிய ஆராய்ச்சிச் சித்திரமாகிய "சந்திர மோகன்" நாடகம், சென்னையிலும் வேறு இடங்களிலும் நடித்துக் காட்டப்பட்ட பல சந்தர்ப்பங்களில், நாடகம் முடிந்து, மக்கள் வீட்டிற்குச் செல்லும் வேளையில், நாடகம் பார்க்க வந்திருந்த வேற்றுக் கட்சித் தோழர்கள், குறிப்பாக காங்கிரஸ்காரர்கள், மேலே குறிப்பிட்டுள்ள 'உரையாடல்' பாணியில் பேசிக்கொண்டு செல்லும் காட்சியை நான் பலமுறை கண்டிருக்கிறேன்.

அப்போதெல்லாம், நமக்கு, உண்மை வரலாற்று நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்டிருக்கும் நம் நாடகத்தைப் பற்றி இவர்கள் இதுபோன்ற கருத்துரையை வழங்குகிறார்களே என்பதை முன்னிட்டுக் கோபம் பிறப்பதில்லை. மாறாக, அவர்களுடைய உரையாடல், நம்முடைய உள்ளத்திலே ஆனந்த கீதத்தைத்தான் உலவவிடுவது வழக்கம்.

உண்மையிலேயே, அவர்களால் சிவாஜியைப் போன்ற மாவீரன் ஒருவன் மத மதோன்மத்தர்களின் தாள் பணிந்தால்தான் முடி சூடமுடியும் எனத்தகும் 'முகாரி நிலை'யிலே இருந்திருப்பான் என்பதை நம்பமுடியவில்லை.

வேழங்களையும் வீழ்த்தும் அளவு வீரம் படைத்த வேங்கை குள்ளநரிக் கூட்டத்தின் முன் கூனிக்குறுகிக் கும்பிட்டுக் கிடந்தது என்பதை அவர்களுடைய பகுத்தறிவு உண்மை என்று ஒப்புக்கொள்ள மறுக்கிறது.

ஆரிய மாயை, அடலேறு சிவாஜியைப்போன்ற அஞ்சா நெஞ்சர்களையும் ஆட்டிப் படைக்கும் ஆற்றல் படைத்ததாயிருக்கிறது என்பதை அவர்களுடைய உள்ளம் நிச்சயமாக நம்பமறுக்கிறது.

இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்காது—நடக்க முடியாது—நடப்பது இயற்கை விதிக்கு மாறுபட்டது—நடந்ததாக யாரேனும் கூறினால் அதை நம்பமுடியாது—நம்புவது கூடாது என்றெல்லாம்தான் அவர்கள் எண்ணுகிறார்கள்.

[illegible] கங்குபட்டரின் காலடியிலே தன் தலைதாழ்த்திப் பணிந்தால்தான், தான் மண்டலாதிபதியாக முடியும் என்று வீரன் சிவாஜி கருதியதாக வரலாறு தெரிவிக்கிறது என்று நாம் கூறினால், அதை அவர்கள் நம்பவே மறுக்கிறார்கள் என்றால், அது, அந்தச் சேதியை நம்பக்கூடமுடியாத அளவுக்கு அவர்களுடைய உள்ளத்திலே ஆரிய எதிர்ப்பு உணர்ச்சி வளர்ந்திருக்கிறது என்பதைத்தான் நமக்கு நன்கெடுத்துக் காட்டுகிறது. ஆகவேதான், அவர்களுடைய உரையாடல் நமக்கு, மன எரிச்சலைத் தரவில்லை, மாறாக இன்ப உணர்ச்சியையே ஊட்டிடும் தன்மையதாய் இருந்தது என்று குறிப்பிட்டோம்.

வாள் ஏந்திய வீரன் சிவாஜியை தங்கள் தாள் ஏந்தும் நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டார்கள் ஆரிய கங்குபட்டரும் அவர் இனத்தவரும் என்ற உண்மையை நாடகம் பார்க்கவந்த காங்கிரஸ் திராவிடர்கள் நம்ப மறுக்கிறார்கள் என்பது இருக்கட்டும் ஒருபுறம், அறிஞர் அண்ணாதுரை, இது சம்பந்தமான சரித்திர ஏடுகளைக் கண்டறிந்ததற்கு முன்னால், இப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது என்று அவரிடம் சென்று யாராவது கூறியிருந்தால், அவரேகூட நம்பியிருக்கமாட்டார் இந்த சம்பவத்தை.

சம்பவம், உண்மையிலேயே, யாராலும் நம்ப முடியாதது தான். ஆனால் நடந்திராதது அல்ல!

இந்த விசித்திர உலகிலே, நம்ப முடியாத எத்தனையோ சம்பவங்கள் நடந்தபடி இருக்கின்றன, அவற்றிலே ஒன்றுதான், ஆற்றல் வீரன் சிவாஜி ஆரிய இனத்தவர்க்கு அடிபணிய நேரிட்ட நிகழ்ச்சி.

"சந்திரமோகன்" நாடகம் வெறும் கற்பனையின் விளைவு அல்ல—வரலாற்றுச் சுவடியிலிருந்து கிழித்தெடுக்கப்பட்ட ஓர் ஏடு.

கங்குபட்டரும், நாடகத்திற்காகச் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு கதாபாத்திரம் அல்ல— நம்மைப்போலவே, ஒரு காலத்தில், இந்த உலகத்தில் நடமாடிய மனிதர்!

ஜதுநாத் சர்க்கார் என்பவர் "சிவாஜி" என்றோர் புத்தகம் தீட்டியிருக்கிறார். அதிலே மிக அருமையான முறையிலே தரப்பட்டிருக்கிறது ஆரியவஞ்சகம் அடலேறு சிவாஜியை தன் அடிபணியச் செய்தது எப்படி என்பதற்கான அற்புதமான தகவல். அப்படி ஒன்றும் **ஜதுநாத் சர்க்கார்** திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளராக இருப்பவர் அல்ல, ஏதோ ஆரியபுரியினர் மீது அவருக்கு இயல்பாக இருக்கக்கூடிய ஆத்திரத்தின் காரணமாகத் தான் இப்படியெல்லாம் எழுதினார் என்று கூறி அவருடைய கருத்துரையை ஒதுக்கித் தள்ளிட! அவர், ஒரு சிறந்த வரலாற்றாசிரியர். வீரன் சிவாஜியின் வாழ்க்கையை பல்வேறு சரித்திர ஆதாரங்களைக் கொண்டு துருவித் துருவி ஆராய்ந்து பார்த்திருக்கிறார் ஜதுநாத் சர்க்கார், அந்த ஆராய்ச்சியின் விளைவுதான் "சிவாஜி" என்ற பெயரில் வெளிவந்திருக்கும் அவருடைய சரித்திர ஏடு—கற்பனைச் சித்திரமல்ல!

சிவாஜி யார் என்று கேட்டால் சற்றும் தயக்கமின்றி சிறு பிள்ளைகளும் விடை கூறுவர், அவன், அஞ்சாமையின் அடையாளச் சின்னம், ஆற்றலின் திருவுரு, வீரத்திற்கோர் எடுத்துக்காட்டு, மராட்டிய மண்டலத்தை மாநிலத்தில் உருவாக்கிய மாபெரும் தலைவன் என்று! ஆம்! சிவாஜி, அத்தகைய வீர புருஷனாகத்தான் திகழ்ந்தான் அவன் வாழ்ந்த காலத்தில்! வீரம் என்றால் எப்படியிருக்கும் என்பதற்கோர் நடமாடும் அடையாளமாக இருந்தான்! சிவாஜி என்ற பெயரைக் கேட்டாலே மராட்டிய வீரர்கள் உள்ளத்தில் தேனாறு பாயும்—தென்றல் வீசும். சிவாஜி தங்களூர் கோட்டையருகே வருகிறான் என்று அறிந்தால், மராட்டிய மக்கள் மன்றத்தில் ஆனந்தம் அரசோச்சும்! களிப்பு, கூத்தாடும்! சிவாஜியைப் பார்ப்பதை, சிவாஜியுடன் பேசுவதை, சிவாஜியின் தலைமையில் போராடுவதை, சிவாஜியின் பட்டாளத்தில் தங்கள் பெயரைப் பொறித்துக் கொள்வதை பெறற்கரிய பேறாகக் கருதினர் மராட்டிய மண்டலத்தவர்கள், சிவாஜியின் கட்டளை பிறந்தால் அனலையும் விழுங்கத் தயாராக இருந்தனர். அவனுடைய ஆணை கிடைத்தால், எத்தகைய கடும் செயலையும் நிறைவேற்ற தயார் தயார் என்று தைரியத்தால் துள்ளிக் குதித்தனர். சிவாஜி என்ற பெயர் அவர்களுக்கு ஒரு ஜீவசக்தி

உழவனுக்குக் கிடையாதாம் ஊராளும் உரிமை !

யாக, அவர்களுடைய உள்ளத்தைத் தட்டியெழுப்பும் உயரிய கீதமாக, அவர்களை உரிமைப் போர்ப் படையின் ஈட்டிமுனைகளாக மாற்றி அமைத்து மறுகோலம் செய்யத் தக்க ஆற்றல் வாய்ந்த ஓர் அற்புத மந்திரமாக இருந்தது. சிவாஜி—மராட்டிய மக்களுக்கு ஒரு மனமோகன கீதம்! ஆனால் மாற்றாருக்கோர் மனதை நடுங்கவைக்கும் மாபெரும் புயல்! சிவாஜி போர் போர் என்று போர் முழக்கம் புரியத் தொடங்கிவிட்டான் என்றால், பூரிப்பு, மராட்டிய வீரர்களின் மனதிலே தவழும், ஆனால் அச்சம் அந்நியர்தம் உள்ளத்தை ஆட்டிப் படைக்கும். சிவாஜி சீறிப்போரிடும் சிங்கமென மராட்டிய மண்டலத்தில் உலவிக் கொண்டிருந்த நேரத்தில் இந்திய உபகண்டம் முழுவதிலேயும் சிவாஜியின் பெயர் எதிரொலித்தது. எங்கும், எங்கெங்கும், அவனுடைய புகழ் ஒளி வீசிடலாயிற்று. யாரும், யார் யாரும், அவனுடைய வீரதீர பராக்கிரமச் செயல்களைப் புகழ்ந்து பேசுவதைத் தமது நித்திய கடன்களிலே ஒன்றாக்கொண்டிடலாயினர்.

பதினாறு வயது பாலகனாக இருந்த நேரத்திலேயே, சிவாஜி, தோர்ணா என்ற கோட்டையைத் திடீர் தாக்குதல் மூலம் கைப்பற்றி, அங்கு தன் வெற்றிக்கொடியை நாட்டினான். பிறகோ, புரந்தர், ரெய்காட், ஜாவ்ளி, கல்யாண், பன்கலா, தண்டராஜபுரி என்று வரிசை வரிசையாக பலப்பல கோட்டைகள் அவனுடைய வீரத்தின் காலடியிலே வந்து வீழ்ந்தன. திக்கெட்டும் அவனுடைய சூறாவளிப் படைகள் திடீர்தாக்குதல் நடத்தி தடதடவென வெற்றி மாளிகைக்குள் நுழைந்து கொண்டிருந்தன. பீஜபூர் சுல்தானும் டில்லி பாதுஷாவும் ஏவிய பிரமாண்டமான பட்டாளங்கள் சிவாஜியின் சிறு படைவரிசையின் முன் எதிர்த்து நிற்கமுடியாமல் பலமுறை தோற்றோடிப் போயிருக்கின்றன.

பரம்பரை பரம்பரையாக அரசாண்டு அனுபவம் பெற்ற குடும்பத்திலே உதித்தவனல்ல சிவாஜி. தலைமுறை தலைமுறையாக உழவுத் தொழிலையன்றி வேறு தொழிலைப் புரிந்தறியாத விவசாயக் குடியிலே பிறந்தவன். ஆம்! சிவாஜி ஒரு விவசாயி; ஆனால் அந்த விவசாயிதான் எத்தனையோ பரம்பரை வீராதி வீரர்களையும் விநாடிநேரத்தில் வீழ்த்தியிருக்கிறான்.

பீஜபூர் மன்னனின் தயவால் தன் தந்தையாருக்குக் கிடைத்த ஒரு சிறு ஜமீன் நிலத்தில் தன் வாழ்க்கை வரலாற்றைத் தொடங்கிய சிவாஜி சிலபல ஆண்டுகளுக்குள்ளாக ஒரு பரந்த சாம்ராஜ்யத்தையே உருவாக்கி விட்டான். சிதறிக் கிடந்த மராட்டிய மாணிக்கங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து, மராட்டிய இனம் மண்ணிலே மாப்புகழுடன் திகழும் வகை செய்தான். வயது சிவாஜிக்கு 34 ஆனபோது, அவனுடைய ஆற்றலும் ஆண்மையும் வீரமும் தீரமும் அதுவரை அவனுடைய காலடியில் கொண்டுவந்து குவித்திருந்த ஜில்லாக்கள் ஏராளம். ஒரு பெரிய நிலப்பரப்பு அவனுடைய ஆட்சியின்கீழ் வந்து விட்டது.

இதுவரையிலே மராட்டிய மக்களின் முடிசூடா மன்னனாக ஜொலித்த சிவாஜி, இப்போது, மணிமுடி தரித்து, பட்டாபிஷேகம் நிகழ்த்தி, மன்னன் என்ற தோரணையில் மண்டலமாள எண்ணினான்.

“இதென்ன பிரமாதமான காரியம்! அரசர் பலரை வீழ்த்தி, படைகள் பலவற்றைப் படுசூரணம் செய்து, பரந்த சாம்ராஜ்யத்தை உருவாக்கிய சிவாஜிக்கு பட்டாபிஷேகம் செய்து கொள்ளத்தானா தெரியாது! இது ஒரு பெரிய, சிரமமான, காரியமா” என்றுதான் எவருக்கும் கூறத் தோன்றும்.

உண்மையிலேயே பட்டாபிஷேகம் செய்து கொள்வதற்குத் தேவையான சகல வசதிகளும் “சிவாஜி”க்கு சம்பூர்ணமான முறையிலே அமைந்து கிடக்கத்தான் செய்தன.

ஆட்சி புரிவதற்கோ நாடு இருக்கிறது—அவன் உருவாக்கிய நாடு! பொக்கிஷத்திலோ பொருள் ஏராளமாக இருக்கிறது—அவன் தேடித் திரட்டிய பொருள்! செல்வாக்கோ அவனுக்கு அமோகம் — அவன் சுண்டுவிரலை அசைத்தால், அந்த அசைப்பின் போக்கிற்கேற்ப மராட்டிய மண்டலமே உடன் அசையும். பட்டாளங்களோ பலப்பல இருந்தன—எத்தகைய போராபத்திற்கும் தயாராக இருக்கக்கூடிய துள்ளுகாளைகள் நிறைந்த பட்டாளங்கள்.

கோட்டை கொத்தளங்கள், காட்டரண்—மலை அரண்—நதி அரண்—மதில் அரண்கள், அருந்திறல் அமைச்சர்கள், உற்றநல் தோழர்கள்—எதிலும் குறைவில்லை சிவாஜிக்கு.

ஒரு பட்டாபிஷேகத்திற்கு என்னென்ன தேவையோ அவ்வளவும் குறைவற இருந்தது சிவாஜிக்கு—என்றாலும் அவனால் பட்டாபிஷேகம் செய்துகொள்ள முடியவில்லை, ஏன்? என்ன காரணம்? சகல வசதிகளும் நிரம்பியிருக்கும்போது பட்டாபிஷேகம் தடைபடுவது எதனால்?

சரித்திர ஆசிரியர் ஜதுநாத் சர்க்கார் இதோ பேசுகிறார், கேளுங்கள்:—

“There was one curious hindrance to the realisation of the Coronation. According to the ancient scriptures, only a member of the kshatriya caste can be legally crowned as a king. The Bhonslas (Shivaji family) were popularly known to be neither kshatriyas nor of any other twice born caste but mere tillers of the soil. How could such an upstart, sprung from such a shudra stock aspire to the rights and honours due to a kshatriya?”

இதன் பொருள், இது:—“சிவாஜியின் பட்டாபிஷேகத்திற்கு ஒரு விசித்திரமான தடை இருந்தது. பண்டைக்கால சாஸ்திரங்களின்படி க்ஷத்திரிய வம்சத்தைச் சேர்ந்த ஒருவன்தான் முறைப்படி மன்னனாக முடிசூட்டிக் கொள்ளமுடியும். சிவாஜியின் பரம்பரை க்ஷத்திரிய வம்சத்தையோ அல்லது வேறு எந்த துவிஜ (இரு பிறப்பு உயர்) சாதியையோ சேர்ந்தது அல்ல என்பதும், நிலத்தை உழுது பயிரிட்டு வாழும் விவசாயக் குடும்பமே அது என்பதும் நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இத்தகைய ஒரு சூத்திர ஜாதியி

ஆணவம் மிகுந்த ஆரிய வாதம்!

பிறந்த ஒரு தான் தோன்றி மனிதன் ஒரு க்ஷத்திரிய புருஷனுக்கே உரிய உரிமைகளையும் பெருமைகளையும் அடைவதென்பது எங்ஙனம் முடியும்?''

மகுடாபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்யத் தொடங்கிய மாபெரும் தலைவன் சிவாஜியைப் பார்த்து மராட்டிய மண்டலத்து முப்புரிதாரிகள் இதுபோன்ற ஆணவக் குரலை எழுப்பினராம்— கூறுவது யாரோ சூனுமானு அல்ல— ஜதுநாத் சர்க்கார், வரலாற்றுப் பேராசிரியர்.

கேளுங்கள் தோழர்களே, வெட்கக் கேட்டைக் கேளுங்கள். சிவாஜிக்கு முடிசூடிக் கொள்ள உரிமையில்லையாம்— ஏனெனில் அவன் ஓர் சூத்திரனும்! இருபிறப்பினருக்கு மட்டும் தான் இத்தகு உரிமைகளும் பெருமைகளும் அடைவதற்குத் தகுதியும் சிறப்பும் உண்டாம் —ஒரு சாதாரண சூத்திரனுக்கு மன்னனாகும் பிறப்புரிமை கிடையாதாம்! உள்ளத்திலே எவ்வளவு தைரியம் இருந்திருந்தால்— ஆரிய மாயையை முறித்துக் தள்ளிவிட்டுப் பட்டாபிஷேகம் நடத்திக் கொள்ளும் தைரியமும் துணிவும் மதப்பற்றுமிக்க சிவாஜிக்கு ஏற்படாது என்னும் உறுதியிலே எவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை இருந்திருந்தால், மராட்டிய மண்டலத்தில் உலவிய ஆரியக் கூட்டம் இது போல தைரியமாக, துணிச்சலாக, வெளிப்படையாக அழுத்தந் திருத்தமாக, சிவாஜிக்கு அரசாளும் உரிமை கிடையாது என்று முழக்கமிட்டிருப்பார்கள்!

ஆற்றலற்றவன் அரசாளக் கூடாது என்றால் அதிலே அர்த்தம் உண்டு. படைபலம் இல்லாதவன் பாராளக் கூடாது என்றால் அதிலே நியாயம் உண்டு, மக்களின் தோழமையும் பாசமும் பெறாதவன் மகுடதாரியாகக் கூடாது என்றால், அது ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய வாதம். ஆட்சித் திறமையும் அனுபவ அறிவும் அற்றவன் தார்வேந்தன் ஆதல் தகாது என்றால், ஆம் தகாது தான் என்று கூறலாம் ஆனால் மராட்டிய சிங்கத்திற்கு மகுடாபிஷேக உரிமை கிடையாது என்று முணுமுணுத்த முப்பரிதாரிகள் இத்தகு வாதங்கள் எதையும் கிளப்பினரில்லை. அவர்கள் சொன்னதெல்லாம் சிவாஜி உழவர் குலத்திலே பிறந்தவன், வேளாண் தொழிலினன், சூத்திரன், ஆகவே அவனுக்கு வேந்தனாகும் சிறப்புரிமை கிடையாது என்பதுதான், எவ்வளவு ஆணவம் மிகுந்த ஆரிய வாதம்! எத்தகைய விபரீதம் கலந்த விசித்திரப் போக்கு!!

சிவாஜி வீரன்தான், தீரன்தான், மகாசூரன்தான், மராட்டிய மண்டலம் பெற்றெடுத்த மகத்தான தலைவன்தான், அஞ்சாத நெஞ்சமும் அயராத உழைப்பும் படைத்த அடலேறுதான், களம் பல சென்று போர் பல நடத்தி புகழையும் புது வாழ்வையும் மராட்டி மண்டலத்திற்குக் கொண்டு வந்து சேர்த்த சீர்மிகு பண்பினன்தான், முகிலைக் கிழித்துக் கொண்டு வெளிக் கிளம்பும் முழுமதிபோல இருண்டு கிடந்த மராட்டிய வாழ்க்கையில் ஒளி வீச வந்த திருவிளக்குத்தான், ஆம்-ஆம் —இவ்வளவும் உண்மைதான்— ஆனால் உண்மை இந்த அளவோடு நின்றுவிட வில்லையே—மேலும் கொஞ்சம் இருக்கிறதே, உண்மை —அவன் சூத்திர ஜாதியிலே அல்லவா பிறந்துவிட்டான், என் செய்வது, எப்படி அவன் மன்னனாவது, சாஸ்திரம் எப்படி இந்த விபரீதத்தைச் சம்மதிக்கும்,—முடியாது, கூடாது, அவன் மன்னன் ஆவது தகாது, தவறு, சாஸ்திர விரோதம், தேவநிந்தனை—மீறி, முடிசூடிக் கொள்வானானால் கேடு பல நிகழும், நாடு சுடுகாடாகும், தேவாதி தேவர்கள் மராட்டிய உலகு மண்மேடாகட்டும் எனச் சபித்திடுவர்—ஒப்ப மாட்டோம் இந்தக் கொடுமைக்கு —சூத்திரனுக்கு அரசா, இருபிறப்பாளர் மட்டுமே பெறக்கூடியபெரு வாழ்வை ஒரு பிறப்பாளன், சூத்திரன், இழிமகன் பெறுவதா, விடுவோமா இந்தக் கேடு நிகழ—பார்த்துக் கொண்டிருப்போமா இந்தப் பாழும் காட்சியை, பிராமணர் அல்லது க்ஷத்திரியர் மட்டுமே இராஜ்யாதிகாரம் புரியலாம் என்று புனித ஏடுகளின் மூலம் மகேஸ்வரன் வரையறை செய்திருக்க, ஆண்டவனின் அந்தக் கட்டளையை மீறிட ஒரு சிவாஜி துணிவதா, தகுமா, நீதியா, முறையா, என்றெல்லாம் மராட்டிய ஆரியர்கள், மக்கள் மன்றத்திலே சூதுமிகு வாதங்களைக் கிளப்பி, மராட்டிய முன்னணியிலே பிளவை, பேதத்தை உண்டு பண்ணப் பெருமுயற்சி புரிந்தனர்.

திடுக்கிட்டுப் போனான் சிவாஜி. பட்டாபிஷேகமோ நிற்கக் கூடாது —சாஸ்திர விரோதமாகச் சென்றான் சிவாஜி என்ற பழிமொழியும் தன்னை அண்டக்கூடாது, என் செய்வது என்று யோசித்தான். மத மாயையை வீசி மக்கள் முன்னணியை முப்புரிமார்பினர் குலைப்பதைப் பார்த்தான். இந்த சாஸ்திரம் ஏந்திகளின் சொல்வழி சென்றாலொழிய, மக்கள், மதவெறி காரணமாக, மதவிரோதச் செயல் புரிந்தான் சிவாஜி என்று கருதிக் கொண்டு தன்மீதே பாய்ந்திடவும் கூடும் என்பதை எண்ணினான். மக்களை ஆட்டிப் படைக்கும் மதமெனும் மந்திரக்கோல் ஆரிய கூடாரத்தவர் கரத்திலே இருப்பதால், அவர்களுடைய தயவைத் தான் பெற்றாலொழிய தான் முடிசூடுவது இயலாது என்பதை உணர்ந்தான். எனவே அவர்களை அழைத்தான். அவர்கட்குப் பெரு மதிப்புக் கொடுத்தான்.

ஒன்றும் தெரியாதது போல அவர்கள் கேட்டனர்:—மஹராஜ்! எங்களை அழைத்தீர்களாமே, என்ன காரணம்?

சிவாஜி சொன்னான் :—சாஸ்திர சிரோன்மணிகளே, தங்கள் சித்தம் என் பாக்கியம். உங்களால் ஒரு முக்கியமான காரியம் ஆக வண்டும். உங்களால்தான் அது ஆகும்.

அவர்கள் :—என்ன அது மஹராஜ்?

சிவாஜி :—தெரியாதா உங்களுக்கு? நான் நாடு பல வென்றிருக்கிறேன், கோட்டைகள் பலவற்றைக் கைப்பற்றியிருக்கிறேன். பிரதேசங்கள் பல நம்முடைய ஆட்சியின் கீழ் வந்திருக்கின்றன. நான் ஆள்கிறேன் அவற்றை— ஆனால் இன்னும் நான் அரசனாகவில்லை. முடிசூட்டுவிழா நடக்க வேண்டும்.

''யாருக்கு பிரபோ? உங்களுக்கா?''

''ஆமாம்! எனக்குத்தான் வேறு யாருக்கு?''

''மன்னிக்க வேண்டும் பிரபோ, மன்னனாகும் உரிமை துவிஜ குலத்தவர்க்கு மட்டும்தானே உண்டு

[4-ம் பக்கம் பார்க்க]

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தான். தன் கலையை மறந்தான். தன் இனத்தை மறந்தான். கொள்கைகளை மறந்தான். இதனால், இவன் வாழ்வு சிதைந்து முழுமதியைக் கார் மேகம் மறைத்தல் போன்று, வளமான வாழ்வு வஞ்சக வலையில் சிக்கி சீரழியத் தலைப்பட்டது. ஒன்றே குலமும், ஒருவனே தேவனும் என்ற நிலைமாறி நால் வருணம் வகுத்துக் கொண்டான். நடமாடும் மக்கள் உலகைக் கைவிட்டு கண்காணாத அறிவுக்கெட்டாத—தேவையற்ற மேலுலகிலே சஞ்சரிக்கும் கற்பனையைப் பற்றிக் கனவு காண ஆரம்பித்தான். காணாத பொருளை கங்காதரன் என்றழைத்து ஆராதனை எடுக்க ஆரம்பித்தான். வீரக் கழலொலி இருந்த இடத்திலே, வேதியரின் வேத வொலி முழங்கியது. கல்விக் கூடங்கள் அமைந்த இடங்களில் கடவுள்களைக் குடியேற்றினான். பகுத்தறிவு பரவிப் பாய்ந்த இடத்திலே மடமைக்கு மதிப்பு அளித்தான். புலியெனப்பாய்ந்து சீறிப் போரிட்டு வாழ்ந்தவன், தர்ப்பைப்புல்லுக்குத் தலைவணங்கினான். கரியையும் பரியையும் ஆண்டு போர்க்களத்தில் சமர் விளைத்தவன் பூதேவரைக் கண்டு நடுங்கினான். புலியைக் கிழித்து தன் வீரத்திற் கறிகுறியாய் அதன் பற்களை அணிந்தவன் பூனை குறுக்கிட்டதும் புறமுதுகிடத் தொடங்கினான். மயிர் நீப்பின் வாழாக் கவரிமானை வாழ்க்கையின் பிரதிபலிப்பாக எண்ணியவன், கொண்ட மனைவியைப் பெண்டாகக் கேட்ட அயவர்களை ஆண்டவன் அடியவர் எனப் புராணம் பாடித் தன் புல்லறிவை விளக்கினான். எந்நாட்டவரும் வாழ வகையறியாது ஏங்கு காலை செல்வ நெடுமாடச் செல்வனாய் வாழ்ந்தான், எழுத்தறியாத ஏனையோர் வாழ்ந்தநாளில் எழில் சுவை இலக்கியங்களைச் சமைத்து இன்புற்றான். கலை வளர்க்க முப்பெருஞ் சங்கங்களைக்கண்டான். அகத்துறை இன்பங்காட்டும் அகமும், வாழ்வின் வளம் விளக்கும் புறமும், தெள்ளு தமிழின் தீஞ்சுவைத் தொல்காப்பியமும், அறிவின் நுணுக்கம் தெறிக்கும் ஐம்பெருங்காப்பியங்களும் வள்ளுவர் குறளும், மற்றும் பல மாண்புறு கலைச்செல்வங்களும் உலகுக்கு வழங்கி வழிகாட்டினான். வாழ்க்கை வாழ்வதற்கே என்று இறுமாந்து கூறியவன் வாழ்வாவது மாயம் எனப்பண் இசைத்துப் பரவாழ்வுக்கு நூலியற்றி, பஜனை கூடங்களும் சமைத்தான். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஆட்சிகொண்ட கலா நிலையங்களிலே, ராமாயணமும் பாரதமும் சிறப்பிக்கப்பட்டன. செந்தமிழ்ப் பூங்காவிலே நச்சுக்காளான்கள் தோன்ற ஆரம்பித்தன. அன்னைமொழிக்கு அரியாசனம் கட்டி அழகு பார்த்தவன் அன்னியமொழிக்கு ஆக்கம் தேடி அலைந்தான்.

இயற்கை அன்னையின் மடியிலே தவழ்ந்த தமிழன் அந்தரங்கத்திலே ஊசலாடத்தலைப்பட்டான். பெற்றதாயையும், பிறந்த பொன் நாட்டையும், காதற்கிழத்தியையும், மழலைச் சொல் மதலையர்களையும் மாயை என்றும் மித்தை யென்றும் கூறி மதிமயங்கினான்.

மங்கிய நிலவொளியிலே மங்கை நல்லாளைக்கண்டு காதல் கொண்டு கடிமணம் புரிந்தவன், புரோகிதர்களின் புரட்டுக்களில் புதைந்து காட்டு முறைக்குக் கால் கோள் விழா வாற்றினான். நீலவானிலே நீந்தி விளையாடும் நிலவைப்போல வண்ண மலர்ப் பூங்காவிலே அசைந்தாடியோடி தாவிப்பரவிவரும் தென்றல் போல—வான வீதியிலே ஓங்கிப்பறந்திடும்வானம்பாடிபோல, தொல்காலந் தொட்டு சுதந்திரமாக வாழ்ந்தவன் அடிமை வாழ்விலே அல்லலுற்று சொல்லொணாத் தீங்குகட்கு இலக்காகி தீப்பட்ட புழுப்போலத் துடிதுடித்து வாழ்ந்தான். வீர வாழ்க்கை மங்கி அடிமை வாழ்க்கை உதயமாயிற்று மக்கள் மாக்களாயினர். ஆம் அப்பொழுதுதான் கங்குல் எழுந்தது கதிரொளி மறைந்தது.

நாளடைவில் தமிழன் தன் இன்ப இலக்கியத்தை மறந்தான் இலக்கியம் மறைய மறைய வாழ்வும் சிதையக்கண்டான். அவன் உயிரினும் ஓம்பிக் காத்த இலக்கியமும், இன்பமும் எழிலும் பின்னிக்கிடந்த வாழ்க்கையும் அவன் கண்ணெதிரிலேயே மறையக்கண்டான், காரணம் ஏன் என்று எண்ணவும் அஞ்சினான். நடமாடும் பிணமாகக் காட்சி யளித்தான். அடிமை வெள்ளத்தில் மூழ்கி பூசுரர்களின் பொன்னடிகளைப் போற்றுவதே பூலோக சொர்க்கம் எனத் தன்னைத்தானே கூறி மகிழ்ந்தான். இதனால், தமிழன் தலைகுனிந்து வாழும் தகுதி பெற்றான். ஈராயிரம் ஆண்டுகள் எப்படியோ ஓடி மறைந்தன.

இவ் வீராயிரம் ஆண்டுகளும் தமிழன் வாழ்வு கருகியமொட்டு—உதிர்ந்த சருகு போன்றது. தமிழகம் இருண்டு காட்சியளித்த காலம்.

வீழ்ச்சியுற்ற தமிழகத்திலே எழுச்சிக்குரல், கலையுணர்வற்ற தமிழகத்திலே கருத்துத்தெளிவு தர சுந்தரம் பிள்ளை தோன்றினார். மனோன்மணீயம் என்ற அருங்காப்பியம் அவரால் அமைத்துத் தரப்பட்டது. சிந்தனை விருந்து அதில் செறிந்து கிடந்தது. விசை ஒடிந்த தேகத்தில் வன்மை யூட்டும் வளமை

(5-ம் பக்கம் பார்க்க)

தொடர்கதை :

பனிரெண்டாம் பகுதி

அழுகையும் ஆத்திரமும்

வீர இளைஞர் இருவரைச் சுமந்துகொண்டு காற்று வேகத்தில் இரண்டு வெள்ளைக் குதிரைகள் பறந்தன! முன்னூறுக்கு மேற்பட்ட வீரர்கள் அந்த இரு இளைஞர்களையும் துரத்திக் கொண்டு வந்தனர்! இளைஞர் இருவரும் இருண்டு அடர்ந்திருந்த ஓர் காட்டினுள் புகுந்ததும், குதிரைகளை விட்டுக் கீழே இறங்கினர். மிரண்ட கண்களோடு சுற்றுமுற்றும் பார்த்தனர். களைத்து, காய்த்திருந்த ஒரு மரக்கிளையின் மீது உட்கார்ந்தனர்! அய்யோ என்று இருவரும் அலறித் துடித்து எழுந்தார்கள்! பெரிய மலைப்பாம்பொன்று, அகோரமான பசியோடு, வாயைத் திறந்தவண்ணம் அவர்களை நோக்கி, விரைந்து வந்துகொண்டிருந்தது! எழுந்து இருவரும் ஓடினார்கள்! ஓடினார்கள்! ஓடினார்கள்! சோர்ந்து உட்கார்ந்தார்கள்! அங்கே ஒரு சிறிய பாறை காணப்பட்டது! அந்தப் பாறையில் ஒரு சிறிய துவாரம் தெரிந்தது! அந்தத் துவாரத்தின் வழியாக இளைஞர்களில் ஒருவன் பார்த்தான்! உள்ளே மின்மினிப்பூச்சிகள் பறப்பதைப் போல, விட்டு விட்டுப் பிரகாசிக்கும் ஒளி தெரிந்தது! காதுவைத்துக் கேட்டான் மங்கையர் நடனமாடும் சதங்கை ஒலி கேட்டது! ஆச்சரியத்தோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்! சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, அந்தப் பாறையை அப்புறப் படுத்தும் மார்க்கத்தைக் கண்டறியத் தொடங்கினர்! கால்சிலம்பு ஆட, யாரோ நடந்து வரும் சப்தத்தைக் கேட்டதும், இருவரும் அருகே இருந்த ஒரு புதருக்குள் ஒடி ஒளிந்து கொண்டனர். நடந்து வந்த நங்கை பாறையின் அருகே வந்ததும் நின்றாள்! பச்சைநிற பட்டுப் பாவாடையை அவள் கட்டியிருந்தாள்! மேலே இறுக இழுத்துக் கட்டியிருந்த கச்சை! இவ்வளவுதான், அவள் தங்க உடலை மறைத்திருந்த ஆடை! நல்ல அழகி! காண்பாரைச் சொக்க வைக்கும் உடற்கட்டு! வயது பதினைந்து அல்லது பதினாறுதான் இருக்கும்! எழில் மிக்க அந்தக் குமரி எல்லாப் பக்கங்களிலும் சுற்றி சுற்றி தன் நீள் விழிகளால் பார்த்தாள்! குனிந்து பாறையின் துவாரத்தில் வாய் வைத்து, "தமிழரின் வீரத்தைத் தட்டித் தரைமட்ட மாக்கி, ஆரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் பிறந்த வீர ஆரிய அணங்குகளே, கதவைத் திறவுங்கள்!" என்று உரத்த குரலில் கூறினாள்! சிறிது நேரத்தில் பாறை நகர்ந்தது! ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு ஒய்யாரி உள்ளே சென்றாள்! திரும்பவும் பாறை மூடிக்கொண்டது! இருவரும் புதரைவிட்டு வெளியே வந்தனர்! ஏதோ மெதுவாகப் பேசிக் கொண்டனர்! ஒருவன் பாறையின் துவாரத்தில் வாய் வைத்து, "தமிழரின் வீரத்தைத் தட்டித் தரைமட்ட மாக்கி, ஆரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் பிறந்த வீர ஆரிய அணங்குகளே, கதவைத் திறவுங்கள்" என்று பெருத்த குரலெடுத்துக் கூறினான்! பாறை நகர்ந்தது! இருவரும் உள்ளே சென்றனர்! ஓடோடியும் வந்தனர் ஒய்யாரிகள் பலர்! ஆசையும் அன்பும் நிறைந்த குரலில் வரவேற்றனர், அபூர்வ அழகிகள்! வியப்பால் இளைஞர்களின் விழிகள் விரிந்தன! தந்தத்தால் செய்த ஆசனங்களில் இருவரையும் உட்கார வைத்தனர்! பாலும் பழமும் தந்தனர்! உண்ணத் தயங்கினர்! அச்சமொன்றும் வேண்டாமென்று அணைத்து முத்தமிட்டனர்! இளைஞர்களுக்கு ஒன்றுமே புரியாமல் திணறினர்! இப்படியும் பெண்கள் இருப்பார்களா என்றெண்ணி வியப்பும் திகைப்பும் கொண்டனர்! ஒருவள் மாலையிட்டாள்! மற்றொருவள் மயில் விசிறியினால் காற்றை அழைத்தாள்! இருவர் கால் பிடித்தனர்! வேறு இருவர் தோளில் சாய்ந்தனர்; ஒரு கூட்டத்தினர் ஆலத்தி எடுத்தனர்! மற்றொரு கூட்டத்தினர் ஆடினர்! விழி சுழல, கை நெளிய இடை துவள, நடனத்தில் கால் தத்த, இனிய குரலால் பாட்டிசைத்தனர், சிலர்! ஒருவள் ஒருவளாக வந்து, இளைஞர் இருவரின் மார்போடு மார்பைச்

சேர்த்து மகிழ்ச்சி மது கசியச் செய்து விட்டுச் சென்றனர்!

கண்டும் கேட்டு மறியாத போக்குக் கொண்ட, கச்சை யணிந்த இளங் கன்னியரின் சரச விளையாட்டினால், அந்த இளம் வீரர் இருவரும் முதலில் திகைப்பினும், முடிவில் மெய் மறக்கத் தினைத்தனர்!

ஆனந்த நடனம் திடீரென்று நின்றது அனைவரும் உற்றுக் கேட்டனர்!

"தமிழரின் வீரத்தைத் தட்டித் தரை மட்டமாக்கி ஆரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் பிறந்த வீர ஆரிய அணங்குகளே கதவைத் திறவுங்கள்!" என்று அழைக்கும் ஆணின் குரல் செவியில் விழுந்தது!

வீரர் திடுக்கிட்டனர்! "வருவது யார்?" என்றனர்! "மன்னாதி மன்னர் பணியும் எம் மாபெரும் தலைவர்" என்றாள் சுந்தராங்கி ஒருவள்! பாறை திறக்கப்படும் சப்தம் கேட்டதும், பயந்து ஒருபுறமாக, இளைஞர் ஒதுங்கினர். சடையும் தாடியும் பெருத்த தொந்தியும் கொண்ட ஒரு பெருத்த உருவம் உள்ளே வந்தது! அந்த ஆரிய உருவத்தைக் கண்டதும் வீரர்களின் அச்சம் இன்னும் அதிகமாயிற்று!

"பயல்கள் தப்பி ஓடி விட்டனர்!" என்றான் கோபமான குரலில் வந்தவன்!

"எந்தப் பயல்கள்?"

"அந்த மன்னனின் இரு புத்திரர்கள்!"

"எங்கே தப்பி விட்டனர்?"

"இந்தக் காட்டினுள்தான் நுழைந்தார்கள்! தேடித் தேடிப் பார்த்தோம் கிடைக்கவில்லை" என்று ஏமாற்றம் நிறைந்த குரலில் பதிலளித்தான், ஆரியன்!

வீரர்களின் கைகால்கள் நடுங்கின!

"இங்கே இருவர் வந்தனர்!"

"இருவரா? எங்கே? எங்கே" என்று அவசரமாகக் கேட்ட ஆரியனை அழைத்துக் கொண்டு வந்து அந்தப் பெண்கள் அவ் விருவரையும் காட்டி விட்டனர்!

ஆரியனின் கண்கள் சிவந்தன! "ஆரிய ஆட்சி பரவாமல் தடுக்க உம்மால் முடியுமா?" என்று ஆவேசத்தோடு கத்தினான்!

"ஏனப்பா இவர்களா நம் ஆட்சி பரவாமல் தடுக்கிறார்கள்? ரொம்பவும் நல்லவராச்சே! இனி அப்படி ஒன்றும் செய்ய மாட்டாரப்பா!" என்று பரிவோடு பாவை ஒருவள் கூறினாள்!

ஆரியனின் முகத்தில் மாற்றம் ஏற்பட்டது! சிரித்த முகத்தோடு அருகே சென்று, ஒருவனின் தோளைத் தட்டிக் கொடுத்து, "உண்மையாகவா? அதுதான் நல்லது! நீங்கள் இருவர் மட்டும் எனக்கு விரோதமாக இல்லாவிட்டால், இந்தப் பூலோகத்திலேயே சுவர்க்க போகத்தை உண்டாக்கித் தருகிறேன்! இந்த இளம் பெண்கள் இவ்வளவு பேரையும்.........."

"போதும் நிறுத்து உன் ஆரிய உபதேசத்தை!"

ஏனப்பா கோபப் படுகிறாய்! இனி நீங்கள் தப்ப முடியாது! இது நிச்சயம்!......எங்கே! ஆரியன் ஜாடை காட்டினான்.

பெண்களின் நடனம் ஆரம்பமாயிற்று. சிறிது நேரம் சென்றது. "என்ன கூறுகிறீர்கள்? கரும்புச் சோலையில் இருக்கிறீர்கள்! வேண்டிய மட்டும் கரும்பு தின்று இன்புறலாம்! தடையா?" என்று சாகச மொழியை வீசி விட்டான் ஆரியன்!

"ஆரிய மாயையைப் புரிந்து கொண்டோம், நாங்கள் வருகிறோம்!" என்று கூறி இருவரும் வேகமாக வெளியே ஓடினர்!

"இனி தப்ப முடியாது! பிணமாவது நிச்சயம்" என்று கூறிக் கொண்டே ஆரியன் துரத்தினான்! பாறையைத் திறந்து கொண்டு வெளியே வீரர் ஓடினர்! ஆரியன் பின் தொடர்ந்தான்! ஆரியன் ஓர் குரல் கொடுத்தான்! துரத்திக் கொண்டு வந்த முன்னூறு வீரர்களும் வளைத்துக் கொண்டனர்! புதர்களுக்குள் எப்படியோ தப்பி அருகே இருந்த ஆற்றில் இருவரும் குதித்தனர்! சிறிது தூரம் நீந்தியதும், வாயைத் திறந்து கொண்டு முதலைகள் அவர்களைச் சுற்றிக் கொண்டன! கரையில் ஆரியனும், அவனுடன் வந்தவர்களும் இடிஇடிப்பதைப் போல கோரச் சிரிப்புச் சிரித்தார்கள்! "அய்யோ! செத்தோம்!" என்று அலறித் துடித்துக் கொண்டே ஆற்றில் அந்த இளைஞர் இருவரும் மூழ்கி மறைந்தனர்!

தூக்கத்தை விட்டு நான் திடுக்கிட்டு எழுந்தேன்! தூய மணி, அந்நேரமும் நான் கண்டது கனவுதான் என்பதை அறிந்த பிறகும் ஏனோ என் உடலும் உள்ளமும் பதறின! அரசனின் புதல்வர்கள் ஆதரவற்ற அனாதைகளாகி, ஆற்றில் மூழ்கியதை எண்ணியதும் என் நினைவுகள் சிலிர்த்தது!

மனிதனின் எண்ணங்களின் விளைவே கனவு என்பதை நான் அறிவேன். நித்திரையில் காணும் கனவிற்கும், நிசத்தில் நடப்பதற்கும் அவ்வளவாக சம்பந்த மிருப்பதில்லை என்பதும்

(2-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons.)